(வலைப்பின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை கல்வாரி தேவஸ்தானம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*[1999, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி** II *இற்குக் ஆம்பகுதிக்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியிட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

*விலை.5.25* *தபாற் செலவு ரூபா 3.50*

**1999ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை கல்வாரி தேவஸ்தானம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ -ஓ 65/96.*

**இலங்கை கல்வாரி தேவஸ்தானத்தைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்**

*"இலங்கை கல்வாரி தேவஸ்தானம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, இலங்கையில் அத்தகைய தேவஸ்தானங்களின் பிரதிநிதிகளினால் இலங்கையிலும், வெளிநாட்டிலும் உள்ள அதேபோன்ற நம்பிக்கையுள்ள தேவஸ்தானங்களிடையே கூட்டுறவு இணையுரிமையை மேம் படுத்தும் சொல்லப்பட்ட சங்கத்தினால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்க சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாலும்:* முன்னுரை

*சொல்லப்பட்ட சங்கம், எப்பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்கும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக் கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும்; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும்: விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் ;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-*

*1. இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை கல்வாரி தேவஸ்தானம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்

*2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையின் கல்வாரி தேவஸ்தானங்களின் தற்போதைய உறுப்பினர்களாகவிருக்கின்றவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான,* இலங்கையின் கல்வாரி தேவஸ்தானங்களைக் கூட்டிணைத்தல்.

அத்தகையோரான அத்தனை ஆட்களும்; (இதனகத்துப் பின்னர் 'கூட்டுத்தாபனம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை கல்வாரி தேவஸ்தானம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்டகுழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லாநீதி மன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அவர்கள் விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்கும், திருத்துவதற்கும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) சங்கத்தின் நம்பிக்கைக் கூற்றை ஏற்றுக்கொண்ட அதே நம்பிக்கையுடைய எல்லா தேவஸ்தானங் களிடையேயும் செயற்பாட்டு இணையுரிமைக்கான அடிப்படை ஒன்றை ஏற்பாடு செய்தல்;

(ஆ) குருமடங்களையும் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசிய மானதெனக் கருதப்படக்கூடியவாறன அத்தகைய வேறு நிறுவனங்களையும் காரியங்களையும் செய்தல்;

(இ) மேற்கூறிய குறிக்கோள்களை எய்துவதற்கு இடை நேர்விளைவான அல்லது அதற்கு உசிதமான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்;

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம் படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசிய மானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான, எத்தன்மை யனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங் களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவற்கும் மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர் களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்*

5. (i) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் வாக்களிக்க உரித்துடைய கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மையைக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் அலுவல் என்பனவற்றுக்காக இச்சட்டத் தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற் பாடுகளுக்கொவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ii) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ள சங்கத்தின் விதிகள், இச்சட்டத்தினதும் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளுடனும் ஒவ்வாதனவாகவிராதவரை, இச்சட்டத்தின்கீழ் கூட்டுத் தாபனத்தினரால் செய்யப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(iii) கூட்டுத்தாபனத்தினரால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகள், அதேபோன்ற கூட்டமொன்றிலும், அதேமுறையிலும் மாற்றப் படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(iv) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப் போதைக்கு வலுவிலுள்ள, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்*

6. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாகவும், அவற்றை விற்க, ஈடு வைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப் படலாமென்பது*

7. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் அந்நோக்கத்திற்கென அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகை யதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்*

8. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

9. இச்சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாரளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்